99

சக்ரவர்த்தினி.

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ”

VOL - 10. தொகுதி - 10.	November 1914. நவம்பர் 1914.	No - 4. பகுதி – 4.

எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்.

இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறியின்கண்நின்று அவ்வாழ்க்கைக்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடு கூடி வாழுகின்றவன் ஈகை முதலியவற்றால் இம்மைப்பயனாகிய புகழையும், மறுமைப்பயனாகிய சுவர்க்கத்தையும், அகத்துறவு வாயிலாகவோ புறத்துறவுவாயிலாகவோ மெய்யுணர்வினைப் பெரியார் வாயிலாகப் பெற்று ஆதனால் மோட்சத்தையும் அடைதற்குரியவனாக விருத்தலின், அவன் இளமையிற் கற்றதனோடு நில்லாது அறம் பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை உள்ளவாறுணர்ந்து, அவற்றைப் பெறுதற்பொருட்டு, தருக்கநூலையும் இலக்கண நூலையும் தக்கார் வாயிலாக உணர்தல் இன்றியமையாததாம். தருக்கநூலையும் இலக்கண நூலையும் உணராதவர்க்கு அறத்தைச்செய்யும்வகை, பொருளைச்சம்பாதிக்கும்வகை, இன்பத்தையனுபவிக்கும் வகை, மோட்சத்தைப்பெறும் வகையென்பனவற்றை உணர்த்தும் நூல்களைத்தக்கவாறுபடித்து, அவற்றின் பொருள்களை யுள்ளவா றுணர்தல் ஒருவாற்றானும் பொருந்துவ தில்லையாம்.

தருக்க நூலையும் இலக்கணநூலையும் அவசியமாகக் கற்க வேண்டுமென்பதை வற்புறுத்தவே, நமது ஞானத்தாயாகிய ஔவைப்பிராட்டியார், ஆத்திசூடியில் “எண்ணெழுத் திகழேல் (தருக்கநூலையும் இலக்கணநூலையும் நீ யிகழாது கற்பாயாக)” எ
றருளியதோ டமையாது கொன்றை வேந்தனில் “ எ

மெழுத்து... கண்ணெனத்தகும் (தருக்கநூலும் இலக்கண நூலும் மக்கட்கு இரண்டு கண்களென்று சொல்லத்தகும்)'' என்றும் திருவாய் ம...லர்ந்தருளினர். தருக்கநூலும் இலக்கண நூலும் கற்பதவசியமா...மென்பது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் † ''எண்ணென்...ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழுமுயி...ர்க்கு'', ''கண்ணுடைய ரென்பவர் கற்ருேர் முகத்திரண்டு, புன்...ணுடையர் கல்லா தவர்'' என்றருளி யிருப்பதனுலும் செவ்வித...ாக விளங்குவதாம்.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருள்களை உணர்த்தும் பொருள் நூல்களைத் தருக்கநூல் இலக்கண நூலென்னுங் கருவிநூல் வாயிலாக உணர்ந்தவர் தாமிருக்குந்தேயத்துள்ள பொருள்களையேயன்றி, வெவ்வேறு தேயங்களிலுள்ள பொருள்களையும் வெவ்வேறு காலங்களிலுள்ள பொருள்களையும் அறியும் அறிவுடையவராதல் நிச்சயமா மாகலின், நம்மனேருள் ஒவ்வொருவர்க்கும் தருக்கநூலையும் இலக்கணநூலையும் கற்பது இன்றியமையாத கடைமையாம். ''இலக்கண நூலை மாத்திரம் கற்பது போதாதோ? தருக்கநூலையும் ஏன் கற்றல்வேண்டும்; தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்குத் தொன்னை யாதாரமா என்ருற்போன்று விதண்டை பேசுவதைக் கற்பிப்பதன்ரு தருக்கநூல்; 'தருக்கம் படித்துத் தலைவெடித்துப் போகாமல்' என்று பெரியார் கூறியிருப்பதனுல் தருக்கநூலைப்படிப்பது கூடாதென்பது விளங்கவில்லையா?'' என்று சிலர் ஆசங்கித்தல் கூடும்? இது பயனற்ற ஆசங்கையாம். இலக்கண நூலைப் படித்தலே போதும்; தருக்கநூலைப் படிப்பது அநாவசியகமென்று கூறுவது எனக்கொரு கண் இருந்தால் போதும், இரண்டு கண் வேண்டுவதில்லை யென்பது போலவாம். இலக்கணநூ லுணர்ச்சி யில்லாதவர்க்குத் தருக்கநூலுணர்ச்சி யுண்டாதல் கூடாமையின், இலக்கணநூலை யுணர்ந்தவரே தருக்கநூலை யுணர்தற்குரியவராவர். இஃது ''ஆற்றி னளவறிந்து கற்கவவை யஞ்சா, மாற்றங் கொடுத்தற் பொருட்டு

---

† பரிமேலழகர் எண் என்பதற்குக் கணிதநூல் என்று பொருள் கூறி...யது தருக்கநூல் கணிதநூலின் ஒருறுப்பாயடங்குவது பற்றி, அவ்வாறு ...ினுரென்றிங்குணர்தல் வேண்டும்; இதனுல் தருக்கநூலை யோதுதல் ...தென்பது அவர் கருத்தன்ரென்பது நன்குவிளங்கும்.

(சொல்லிலக்கண நெறியானே † அளவை நூலை ‡ அமைச்சர் உட்பட்டுக்கற்க, வேற்று வேந்தர் அவையிடையஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரஞ் சொல்லுதற்பொருட்டு)'' என்று திருவள்ளுவர்கூறுதலால் நன்குவிளங்கும். சொல்லிலக்கண நூலைக் கல்லாதவர்க்குத தருக்கநூலைக் கற்பது முடியாதாகலின், தருக்கநூலைக் கற்றற்பொருட்டுச் சொல்லிலக்கண நூலைக் கற்பது அவசியமாம். சொல்லிலக்கண நூலுணர்ச்சி எழுத்திலக்கண நூலுணர்ச்சியும், பொருளிலக்கண நூலுணர்ச்சியும் இல்லாதவிடத்துச் செவ்விதாக உண்டாவ தில்லையாம். ஆகவே, எழுத்து, சொல், பொருளென முத்திறத்ததாக விளங்கும் இலக்கண நூலைக் கற்றவர்க்கே தருக்க நூலைக் கற்பது வாய்ப்பதென்றிங்குணர்தற் பாலதாம். இலக்கண நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென ஐந்து கூறுபாடுடையதா யிருக்க, எழுத்துச் சொல் பொருளென மூன்று கூறுபாடுடையதாகக் கூறுவதமையுமோ வெனின், யாப்பும் அணியும், பொருளில் அடங்குதலின், அமையும். இது தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரமென முக்கூறுபாடுடையதாக விருத்தலால் நன்கு விளங்கும். ''எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்'' என்று கூறப்படுதலால், தருக்க நூலுணர்ச்சியின்றி இலக்கண நூலுணர்ச்சிமாத்திரமுடையவர் ஒற்றைக்கண்ணர்போல்பவராவர்; இலக்கண நூணர்ச்சியு மின்றியிருப்பவரோ எதனையும் செவ்வையாக அறிதற்குரியவராகா திருத்தலின், அவர்குருடர்போல்பவராவர். வடநூலார் ''தருக்க வியாகரண (இலக்கண)மென்னு மிரண்டுமே மக்கட் கிருகண்ணாகும்'' என்று கூறுவதனாலும், அவை யிரண்ட னுணர்ச்சியு மில்லாதவர் ஊன (மாமிச) க் கண்ணுடையவரா யிருப்பினும், வெவ்வேறு தேயங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் நிகழுவனவற்றை யறிதற்குரிய ஞானக்கண் ணில்லாதவரா யிருத்தலின், அவர் ஒரு வகையால் குருடரே யாவ ரென்பதற்கு யாதோர் ஐயப்பாடு மின்றாம்.

இலக்கணமாவது இலக்கியத்தின் அமைதியாம். பிருதிவி (மண்) நாற்ற முடையது; அப்பு (நீர்) குளிர்ந்த பரிசமுடையது; தேயு(தீ)சுடும் பரிச முடையது என்றவிடத்துப் பிருதிவி, அப்பு, தேயு என்பன இலக்கியமாம்; நாற்ற முடைமை, குளிர்ந்த பரிச முடைமை, சுடும்பரிச முடைமை யென்பன இலக்கணமாம். அவ்

† அளவைநூல்-தருக்கநூல். ‡ அமைச்சர்-மந்திரிகள்.

வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவ மென்னும் முக்குற்றமு மில்லாதது இலக்கணமா மென்றிங் குணர்தல் வேண்டும்.

1. இலக்கியத்தின் ஏக தேசத்தில் இலக்கண மிருத்தல் அவ்வியாத்தியாம். அது குடுமி யுடையவர் மனிதரென்றாற் போல்வதாம்.

2. இலக்கிய மல்லாததின்கண்ணும் இலக்கணமிருத்தல் அதிவியாத்தியாம். அது மூக்குடையவர் மனிதர் என்றாற்போல்வதாம்.

3. இலக்கணம் இலக்கிய முற்றுமிராமை அசம்பவமாம். அது வாலுடையவர் மனிதர் என்றாற் போல்வதாம்.

'எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்' என்னும் வாக்கியத்தின்கணுள்ள எழுத்தென்னும் இலக்கணம் எழுத்துச்சொல் பொருள் என்பனவற்றின் இலக்கணத்தையுணர்த்திநின்றதென்றிங்குணர்தல் வேண்டும். பழமென்பது மருத்துவ (வைத்திய) நூலில் எலுமிச்சம்பழத்தையும் மற்றவிடத்தில் வாழைப் பழத்தையு முணர்த்துவதுபோல இங்கு இலக்கண மென்பது எழுத்துச்சொல் பொருளென்பனவற்றின் இலக்கணத்தை யுணர்த்தி நின்றது. எழுத்துச் சொல்பொருளென்பனவற்றின்இலக்கணத்தையுணர்த்தும் நூலே இங்கு இலக்கண நூலென்று கூறப்படுகின்றது. எழுத்துச் சொல் பொருளென்பனவற்றின் இலக்கணங்கள் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்க மென்றற் றொடக்கத்து நூல்களின் ஆராய்ச்சியால் விளங்குவனவாம். இவை தாம் இலக்கண நூல்கள்.

தருக்கமாவது விசாரவடிவமாம். அஃதாவது யுக்தியாம். யுத்தியாவது இது கூடும், இது கூடாதெனத் தோன்றும் அறிவாம். இஃது அநிஷ்டத்தைச் சம்பாதித்துத் தருவதாம். புகை தீயில்லாவிடத்தும் இருக்கும் என்றொருவன் கூறுவானாயின், அவனுக்குத் தருக்க நூலுணர்வுடையான், புகை தீயின் காரியமன்றோதல்வேண்டும்; புகை தீயின்காரியமா யிருத்தலின், தீ யில்லாவிடத்துப்புகையிராதுஎன்று கூறுகின்றான். அதனாலவன் புகையுள்ள விடத்துத் தீ யிருத்தல் வேண்டுமென்று தனக்கிஷ்ட மில்லாமலே யங்கீகரிக்கின்றான். இவ்வாறங்கீகரிக்கச் செய்வதற்கேது தருக்கமாயிருத்தலின், தருக்கம் விதண்டை பேசுவதற்குச் சாதகமாவ தில்லையாமென்று நன்குணர்தல் வேண்டும். பெரியார் "தருக்கம் படித்துத்

தலைவெடித்துப் போகாமல்” என்று கூறியது தருக்கநூலைப் படித்தபின் பொருள்நூலைப் படிக்கமுயலாது தருக்கநூலையே படித்துக் காலங் கழிப்பவரை நோக்கியதாம்.

தருக்கம் அனுமானப் பிரமாணத்திற்கு உபகாரமாயிருத்தலின், உபசார வழக்கால், பிரமாணமுதலியவற்றைக் கூறும் நூல் தருக்க நூல் என்று கூறப்படுகின்றது. தருக்க நூல் அனுமானப் பிரமாணமே நியாயமென்றும், அதற்குபகாரமாக விருப்பது தருக்கமென்றும் கூறுகின்றது. பிரமாண முதலியவற்றைக் கூறும் நூல்கள் தருக்கபரிபாஷை, தருக்க கௌமுதி, தருக்காமிர்தம், நியாயப் பிரகாச முதலியனவாம். இவைதாம் தருக்க நூல்கள்.

இலக்கண நூலைப் படித்து, பின் தருக்க நூலைப் படிப்பவர்க்கு அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருள்களைக் கூறும் பொருள் நூல்களின் அர்த்தம் மிகு எளிதாக விளங்குவனவாம். இவ்விளக்கத்திற்குக் காரணம் இலக்கண நூலுணர்ச்சியும் தருக்க நூலுணர்ச்சியுமாக விருத்தலின், அவை மக்கட்கு இரண்டு கண்கள் போல விருக்கின்றன. இக்கண்களுடையவர் கொடுநெறியிற் செல்லாது செந்நெறியிற் செல்லுவராதலின், அவர் இம்மைப் பயன், மறுமைப் பயன், மோட்சமென்பவற்றை முறையே யடைதற்குரியவராகின்றனர்.

இலக்கண நூலுணர்ச்சியும் தருக்க நூலுணர்ச்சியும் நம்மனோர்க்கின்றியமையாதனவா மென்பது பின் வரும் செய்யுள்களாலினிது விளங்குவதாம்.

“ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி
னீதி வழுவா நிலைமையவான்-மாதே
யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு”.

(ஆதிமுதலொழிய-தலைமைவாய்ந்த வேதமென்னும் முதனூல் தவிர; நீதிவழுவாம்.—நீதியினின்றும் பிறழ்ந்தனவாகிய; எண்-தருக்கம்).

“எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.”

(எழுத்து - இலக்கணம்; இழிதகைமை - அறியாமை; முதனூல்-வேதம்).

குசேலோபாக்கியானம்.

(முன் தொடர்ச்சி).

இங்ஙனங்கூறிய தமது கொழுநனது சொற்களைச் சுசீலை கேட்டுமனமகிழ்ந்து, இதற்கு (கையுறைகொண்டு போதற்கு) யான் செய்யத்தக்கது யாதோவென்று யோசித்து, அன்று முதற்கொண்டு உபவாசமிருந்து, குசேலமுனிவர் காட்டிற்சென்று பொறுக்கி யெடுத்துக்கொண்டு வந்து கொடுக்கின்ற நீவாரப்புல்தானியத்தில் தனக்குரியபாகத்தைச்சேர்த்துவைத்து, தான்விரும்பியதானியம் சேர்ந்தபோது, அதனைஒருநாள் நீரில் நனைத்து நன்றாகவறுத்தெடுத்துக்கொண்டு உரலிலிட்டுக்குத்திச் சுத்தமான அவலாகச் செய்து, குசேலமுனிவரது கந்தைத்துணியின் ஒருபாகத்தில் முடிந்து தந்து, அவரைநோக்கி, சுவாமிகளே! தாங்கள் துவாரகைக்குச் சுகமாகப்போய்வாருங்கள் என்றுகூறினார். உடனேகுசேலமுனிவர் துவாரகைக்குச் செல்லப்பிரயாணமானார். நெடுந்தூரம்நடந்து அறியாதவரும், கட்டுச்சோறு முதலியவற்றுள் ஒன்றுமில்லாதவருமாகிய குசேலமுனிவர் துவாரகைக்குச் செல்லும் வழியை வழியிற் செல்லுவாரை விசாரித்தறிந்து, அநேக காததூரஞ்சென்று, ஓரிடத்தில் கிளைவழியைப் பார்த்து, செல்லும்வழி இதுவென்று தெரியாது திகைத்துப் பின், துவாரகைக்குச் செல்லும்வழி இதுவென்று தெரிந்து, யானைகள் வசிக்கும் பல மலைகளையும் பல பாலைவனங்களையும் கள்வரும், கரடி, சிங்கம், புலி, முட்பன்றி, காட்டுப்பசு முதலிய மிருகங்களும் வசிக்கின்ற நெருங்கிய காடுகள் பலவற்றையுங் கடந்துசென்றனர்; அப்பால் மா, வாழை, பலா, கமுகு, தென்னை முதலிய மரங்கள் நிறைந்து நீர்வளமிக்க மருதநிலங்கள் பலவற்றை மெல்ல மெல்லக்கடந்து சென்று, பின் செல்வத்தால்சிறந்துவிளங்கும், பற்பலநகரங்களையுங் கடந்துசென்றனர்; அப்பால் வஞ்சனை, அழுக்காறு, வெகுளி என்பனவற்றை உள்ளே மறைத்து வெளியே நட்பினர்போல அபிநயித்து, தாம் செலுத்தவேண்டிய திறையையும் செலுத்திவணங்கி, சமயம் வந்தபோது தம்மரசரைக் கொல்லுகின்ற குறும்பரசர் வாழ்கின்ற நகரங்கள் பலவற்றைக் கடந்து சென்று, பிறகு கடலின்வயிறுகிழியப்பாயும் நதிகள் பலவற்றையுந் தாண்டிச் செல்வாராயினர்.

உடம்பில்மாமிசமென்பதின்றி இளைத்து, இனியான் மற்றை வழியையுங் கடப்பது எவ்வாறென்று ஆராய்ந்தறிந்து மெல்ல

மெல்லக் குசேலமுனிவர் செல்லும்போது, முதிர்வேனிற் காலமானது (ஆனிஆடிமாதம்) மண்ணும், நீரும், காற்றும், எண்ணுவாரது மனமும் கொதிக்கவும், மனையைவிட் டகலா தார்க்கும் கண்ணும் கையும் காலும் கொதிக்கவும், கற்பக விருக்ஷம் பொருந்திய விண்ணுலகமும் கொதிக்கவும் வந்தது. அதனால் பூமியில்வெடிப்புக்கள்பலஉண்டாயின; பொய்கை,குளம், வாய்க்கால், ஆறு முதலியஅனைத்தும் வற்றிப்போயின; மான்கள் நீர் வேட்கை மிக்குக் கானலை நீரென்றெண்ணி ஒடி வருந்துவன வாயின. வாய்க்கால், ஓடை, தடாகம், குளம் முதலியன வற்றிப் போயினமையின், அவற்றில் வாழ்ந்திருந்த நீர் வாழ்ப் பறவைக ளெல்லாம் "அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல், உற்றுழித் தீர்வார் உறவல்லர்." என்பதைவிளக்குவதுபோல அவ்விடத்தி னின்றும்ஓடிப்போயின.வடவா முகாக்கினியானது இம்முதிர்வே னிற் பருவத்திற்குச்சகியாது, சமுத்திரத்தைத்தேடி ஒளித்துக் கொண்டதென்று சொல்லுமாறு அப்பருவமானது சிறந்து விளங்கியது.

குசேலமுனிவர் இம்முதிர்வேனிற் பருவத்தில் பசியால் மிக வருந்தியும், மரநிழலில் தங்கியும், பள்ளமாயுள்ள விடங்கள் பல வற்றைத்தேடிச் சென்றும்நீர்கிடையாமையால் தாகத்தால்காவுலர் ந்தும்சோர்வடைவார்;பொழுதுபட்டால்ஊரிலுள்ளாருள் நாம்துயி ல்வதற்கு இடங்கொடுப்பார்யாவர்? நமக்குயார் இவ்வூரில் பழக்க முடையவர்? ஒருவருமிலரே யென்றெண்ணி, ஊரிலுள்ள கோயி லின் முற்புறத்தில் (ஒவ்வொருநாளும்) இராக்காலத்தில் தூங்கிச் சூரியன்உதயத்திற்குமுன்னெழுந்து துவாரகையைநோக்கிப்பிரயா ணஞ்செய்வாரானார். குசேலமுனிவர் காட்டிலுள்ள வேலமுள் ளைத்ததனால் காலை நிலத்தில்ஊன்றமுடியாமலும், அதனைவாங்கு தற்குரியகருவியும் அவ்விடத்தில் கிடைக்கப்பெறுமலும் மனம் நொந்து முகம்வாடி ஓரிடத்திற்றங்கி, யாதாவதொன்றைத்தானெ ண்ணியவாறே செய்தல் ஒருவனுக்கின்பத்தைத் தருவதாம்; குரு மொழிகேட்டுச் செய்தலோ அதனினும் சிறப்புடையதாம்; பகை வர் சொல்லைக்கேட்டுச் செய்தலோ மிகுந்த துன்பத்தைத்தருவ தாம்; மனையாள்சொல்லைக் கேட்டுச்செய்தலோ அதனினும் மிகுந்த துன்பத்தைத்தருவதாம்; இவற்றையான் நன்றாக அறிந் திருந்தும் மனைவி சுசீலை சொல்லியசொற்கு உடன்பட்டு மிக்க

வெயிலால் உடம்புவாடி மூர்ச்சையடைந்து இளைக்கின்றேன்; விரைவாக அநேகங் காதவழிகடந்து வந்தேன். துவாரகை இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றதென்று கேட்டால், பிரயாணிகள்யாவரும் இன்னும் அது வெகு தூரத்திலிருக்கின்றதென்று கூறுகின்றனர். இன்னுமுள்ள வழியைக் கடந்து செல்லவோ எனக்குச்சக்தியில்லை. ஒருவகையால் அவ்வழியைக்கடந்துசென்றாலும், இடையேயுள்ள கடல்வழியை எவரது உதவியைக்கொண்டு கடப்பேன். அக்கடலைக் கடந்து சென்றாலும் துவாரகையில் என்னை மதிப்பவர் யார்? இதுபற்றிச் சற்றும் ஆலோசியாது துவாரகைக்குவரப் பிரயாணமாயினேன். ஹா! ஹா! என்னகாரியஞ் செய்தேன்?

முடிமன்னர் பலர் மிகவும்வந்து காத்திருக்கின்ற கண்ணபிரானது தலைவாயிலை நானெவ்வாறு அடைவேன்? அவ்வாயிலில் நுழைந்து சென்றாலும் கண்ணபிரானது சேவை ஏழையாகிய எனக்கு எளிதாகக்கிடைக்குமோ? கற்பகவிருக்ஷத்தை யடைந்தும் காஞ்சிரங்காய் (எட்டிக்காய்) பெறவிரும்புவார்போல, கண்ணபிரானது சந்நிதியை அருமையாகச் சேர்ந்தும் அற்பமாகிய செல்வத்தைப் பெறவிரும்புதல் அறிவாகுமோ? என்றுபலபலவாறு ஆலோசித்து பெருமூச்சு விட்டனர்; பிறகு இனி என்ன துன்பம் நேர்ந்தாலும், இவ்வளவு தூரம்வந்தமையால் மனைவி சுசீலைக் குரைத்தவாறு துவாரகைக்கே சென்றுவருவமென்று ஆலோசித்து, தாமிருந்த விடத்தினின்றும் எழுந்து சிலநாளில் மேற்றிசைக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்.

பின் குசேலமா முனிவர் கண்ணபிரானைப் போலக் கருமை நிறமுடையதாய் விளங்கும் அக் கடற்கரையின்கணுள்ள நெய்தல் பூத்திருத்தலி ஞாழது முதலிய பலவற்றையும் பார்த்து வியப்புற்று, அங்குள்ள ஒரு புன்னை மரத்தின் நிழலிலே உட்கார்ந்து, கடல் நீர்ச் சிறுதிவலைகள் தம்மீது படுதலாலும், இளங் காற்று வீசுவதாலும் இளைப்பு நீங்கிச் சிறிது பொழுதிருந்து, இங்குத் துவாரகைக்குத் செல்லப் பிரயாணிகளுக்கு மரக்கலத்தை (கப்பலை)ச் செலுத்துகின்றவனுக்குக் கொடுப்பதற்குச் சிறிது பொருளும் என்னிடத்தில்லை; அவன் பொருள் கேளாமலே என்னை மரக்கலத்திலேற்றிச் செல்லுவதற்கேற்ற கௌரவம் என்னிடத்து அற்பமாகவேனுமில்லை; கண்ண

பிரானைத் தரிசிக்க யான் வந்தேன்; என்னிடத்துப் பொருள் சிறிதேனுமில்லை யென்றுண்மையைக் கூறினும் அவனதனை யுண்மையென்று நம்பமாட்டான் என்று பலவாறாக ஆலோசித்து, இனி செய்யத்தக்கது யாதிருக்கின்றது; துவாரகைக்குக் கண்ணபிரானைத் தரிசிக்கப் போகிறேன்; என்னிடத்துப் பொருள் சிறிதுமில்லை; தயவு செய்து என்னை மரக்கலத்தி லேற்றிக் கொண்டுபோக வேண்டுமென்று நன்மொழிகளைக் கூறி, அவனை யாசித்துக் கேட்பதே தகுதியா மென்று தீர்மானித்து, அவ்விடத்தினின்றும் எழுந்து, மரக்கலத்தைச் செலுத்துவானிடத்துச் சென்று, அவன்மனம் இரங்குமாறு பல உபசார வார்த்தைகளைக் கூறினர். அவன் அவர் வார்த்தைகளைக் கேட்டு, மனமிரங்கி, அவரைத் தனது மரக்கலத்தி லேற்றிக்கொண்டான். அம்மரக்கலம் துவாரகையின் துறைமுகத்திற்குச் சென்று நின்றவுடன், குசேலமாமுனிவர் கண்ணபிரானைத் தரிக்கும் பாக்கியம் நேரிடுவதாயிற்றே யென்னுஞ் சந்தோஷத்தோடு பிரயாணிகளுடன் அம்மரக்கலத்தினின்றும் இரங்கித் துவாரகா புரியைப் பார்த்தனர்.

துருவசரித்திரம்.

அத்தியாயம்-2.

துருவனைப் பயந்த ஸுநீதி மகாஉத்தமி; அவள் வஞ்சகமென்பதறியாத வஞ்சிக்கொடி; "வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் தண்ணீர்" என்று கருதும் கருத்தினள். இவளுக்குத் தன்நாயகன் ஸுருசியிடம் அன்பாயிருப்பதுபோல் தன்னிடமில்லை யென்பது தெரியுமாயினும், அதனைச்சிந்தியாதுதான் தன் கணவனுக்கு எதனைச்செய்யக்கடமைப்பட்டவளோ அதனைமுறை தவறாது செய்து வந்தனள். இவள்கொண்டானே கும்பிடுந்தெய்வம் என்றெண்ணி அவனிடம் அன்பு செலுத்திவந்தாள். இவள் இவ்வாறிருந்தும், உத்தானபாதன் இவளை இளையாளைப்போலப் பார்த்தானில்லை. என்னசெய்யலாம்! மோகம் பொல்லாததன்றோ?

இவ்வாறான உயர்ந்த எண்ணத்துடன் கவலையின்றித் தன் வாழ்க்கையை நடத்திவரும் ஸுநீதியினிடம் துருவன் தன் கண்களிலிருந்து நீர்பெருக அழுதுகொண்டு வந்தான். அவனைக்கண்ட

ஸுநீதி எழுந்து ஓடிக்கட்டியணைத்துக்கொண்டு "அப்பா! கண்ணே! என் கண்மணியே! ஏனடா அழுகிறாய், யாரடா உன்னையடித்தது? ஏனடா இப்படி யழுகின்றாய்? நீ அரண்மனைக்குத்தானே போயிருந்தாய்? அங்கே யார் உன்னையடிப்பவர்கள்? அப்பா கோபித்துக்கொண்டாரா? இல்லாவிட்டால் சிற்றன்னை சினந்து கொண்டாளா? நீ என்னசெய்தாய், அவர்கள் உன்னை அடிக்கவும் கோபிக்கவும்? ஏனடா? சொல்லப்பா கண்மணி!—" என்று கேட்டாள். துருவன் ஒன்றும் பேசாமல் பெருமூச்செறிந்து தேம்பித் தேம்பி யழுதான். அப்பால் ஸுநீதி அவ்விடத்திலேயே உட்கார்ந்து தன் மடிமீது மகனை வைத்துக்கொண்டு "என் கண்ணே! என்னடா இப்படி யழுகின்றாய்? உன்னை யாரேனும் அலக்ஷியஞ் செய்தார்களா அரண்மனையில்" என்று கேட்டாள். துருவன் அழுகையை நிறுத்தி அன்னையின் முகத்தைநோக்கித் தன்சிற்றன்னையின் அகங்காரமொழிகளை யெல்லாம் ஆதியோடந்தமாகக் கூறினான்.

இக்கடுமொழிகளைக் கேட்டதும் ஸுநீதியின் முகத்தில் தெளிவுகுன்றியது. உடனே "ஆ! ஜகதீசா! என்று பெருமூச்செறிந்தாள். அவள் தேகத்தில் அவளை யறியாமலே வேர்வையுண்டாயிற்று. மனம் எல்லாவற்றையும் பறிகொடுத்ததுபோல் பதறியது. சற்று நேரம் ஒன்றும் பேசாமலிருந்தாள். பின்னர் மகனை அப்பா!" என்று கூப்பிட்டு இன்னொருமுறை பெருமூச்செறிந்து என் ஆண்டவனே என்று கூறி துருவன் முகத்தைப் பார்த்துக் குழந்தாய்! நீ துக்கப்படாதே! துக்கப்படுவதிற் பயனென்ன? நான் மகா பாபி; எப்பொழுது நீ என் கர்ப்பத்தில் குழந்தையாய்ப் பிறந்தனையோ அப்பொழுதே நீயும் பாபியாயினாய்; கொண்ட கணவனுக்கு நான் எப்போது பிரியமில்லாதவளாகிப் போனேனோ அப்போதே என் பிறவி இழிவானதேயாம். அதுபோல நீயும் ஆனாய்! அதனாலென்ன நமக்கு? நாம்பூர்வத்தில் செய்த வினையின் பயன் இவ்வளவுதானென்று எண்ணிவருவதை அநுபவித்தேதீரவேண்டுமன்றி வேறுநாமென்ன செய்தல் கூடும்? நான் இராஜாவினுடைய மனைவிதான். நீயும் இராஜாவின் புத்ரனே! ஆயினும் நாம் பாக்யஹீனர்கள். பாக்யசாலிகளுக்கே இராஜசிங்காதனத்தில் அமரும் வைபவம் கிட்டும். உத்தமனும்

அவனைப் பெற்ற ஸூருசியும் பாக்யம் செய்தவர்கள் என்பதில் ஐயமில்லை. இல்லாவிட்டால் உன் தந்தை நம்மைவிட அவர்களை நேசிப்பாரோ? ஆகையால் நீ இதுபற்றிக் கவலைப்படாதே. அப்பா ஒன்று கூறுவேனுனக்கு. உன் சிற்றன்னை சொன்ன சொற்கள் உன்னை மிகுதியும் வருத்தத்திற்குள்ளாக்குமென்பதை நானறிவேன். ஆயினும், அதற்காக நான் செய்யத்தக்கதொன்று மில்லை. முக்யமாய் உலகத்தில் எவனுக்குத் தெய்வாநுக்ரகம் ஏற்படுகிறதோ அவனுக்கே கவலையற்ற வாழ்வும், எண்ணிய எண்ணங்கள்யாவும்சித்தியாம். இவ்விரகசியத்தைதெய்வசிந்தனையுடையார் நன்கறிவார். எல்லாம் இறைவன் செயல். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. அவன் நல்லாருக்கு நல்லவனுக இருப்பன்; அவன் இல்லாத இடமில்லை. அவன் எங்குமிருப்பவன். அவன் தன்னைக் கருதும் அன்பர் அகத்திலிருந்து இகபர நன்மைகளை எண்ணியவாறு உதவுவான். ஆகையால் நீ அவனைக் குறித்துத் தவஞ்செய்து அவன் அருளைப் பெறுவாயேயாயின், மேன்மைகளெல்லாம் தாமே வந்து உன்னை யடையும். அப்படி அவன் அருள்பெறும் உனக்கு எங்கும் எவனாலும் எப்போதும் இடர் உண்டாகாது. இஃதுண்மை. "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்னும் முதுமொழிக்கிணங்க அவன் உன்னை எச்சமயத்திலும் கைவிடாதாண்டு வருவன். அவனை நாராயணன் என்றும் பரந்தாமன் என்றும் தாமோதரன் என்றும் இன்னும் பல வாறுன நாமங்களாலும் பக்தர்கள் போற்றுவார்கள். அந்த நாராயணனைக் குறித்துத் தவம்புரிய யத்தனப்படு என்று கூறினாள்.

இவ்வாறு குணமணியாகிய ஸூநீதி கூறவே, துருவன் தன் அன்னையின் முகத்தை அன்போடுபார்த்து, "அம்மா! என்மனம் சுருசிகூறிய கடுமொழிகளால் கலங்கிச் செய்யத்தக்கதிதுவென்று உணரக்கூடாமல்தவிக்கின்றமையின், தாங்கள்கூறியவார்த்தைகளை நன்குய்ஏற்றுக்கொள்ளச்சக்தியற்றிருக்கிறது; ஆயினும் ஒன்றைத் தீர்மானித்து அதன்படி நடக்கச்சித்தமாய்விட்டேன். அம்மா! நான் யாரால் அவமதிக்கப்பட்டேன். செல்வச் செருக்கினுல் தன் வாழ்வைப் பெரிதாக எண்ணியுள்ள ஒரு பெண்ணுலல்லவா? உலகமுழுதும் புகழும்படியான ஒரு பெரிய ஸ்தானத்தை அடையவேண்டுமென்று நிச்சயித்துவிட்டேன். எனக்கு அப்ப

டிப்பட்ட வல்லமையுண்டென்பனத நம்புங்கள். சுருசியின் வயிற்றிலே பிறவாததனுல் எனக்கு வல்லமையிராதென்று கருதவேண்டாம். சுருசி வயிற்றில் பிறந்தவனுகிய என் சகோதரனுன உத்தமன் இந்த ராஜ்பத்தை யடையட்டும். நான் என் தவத்தின் வல்லமையால் எல்லோருக்கும் அரிதான ஒரு பெரிய ஸ்தானத்தை யடைந்து மேன்மைபெறுவேன். என் சொந்தமுயற்சியால் எதனை நான் அடைவேனே அதுதான் எனக்குப் பெரிதாகும். பிறர் கொடுக்கும் எதையும் என் மனம் பெரிதாக ஏற்காது. அம்மா! என் கோரிக்கை கைகூடுவதன் பொருட்டு, நான் வனத்திற்குச் சென்று அங்குத் தனித்திருந்து தவம்புரியவேண்டும். என்னை ஆசீர்வதித்து அனுப்புங்கள்" என்று கேட்டுக் கைகுவித்து வணங்கி நின்றான்.

இவ்வாறு நிற்கும் தன் செல்வப்புதல்வனுகிய துருவனை ஸுநீதி கட்டித்தழுவி உச்சிமோந்து அப்பா உன்னை நான் எப்படி தவத்திற்கு அனுப்பத்துணிவேன். குழந்தையாகிய நீ தவம்புரியச் செல்வதென்றால் எப்படியடா அதனை உலகம் ஏற்கும்? காட்டில் நீ எப்படி யப்பா இருந்து தவம்புரிவாய்! என் கண்ணே! உனக்கு நான் எப்படி விடைதருவேன்? என்று கூறிக்கண்கலங்கினுள். ஆயினும் மனந்தேறி "அப்பா! தவத்தினுல் சகலமும்கைகூடும்; தவத்தினுல் ஆகாதது ஒன்றுமில்லை யென்பதும் நிச்சயம். அப்பா! நீபோய் எப்படியாவது உன் கோரிக்கையை அடைந்து உலகம் மதிக்கும் உத்தமனுக விளங்கு. உனக்குச் சகல லோக சரண்யனுகிய நாராயணமூர்த்தி சர்வமங்களங்களையும் கொடுத்தருள்வார். அவர் உன் இருதய கமலவாசியாக விளங்குவார் என்பது ஸத்தியம்! அவரை நீ நம்பு; அவரை மறவாதே! போய்வா" என்று கூறி விடைகொடுத்தனுப்பினுள். (வரும்).

வரகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதி,
சென்னை.

உறுதி மொழிகள்.

இளமையிற் கல்வி சிலையி லெழுத்து.
மறவாக் கல்வி யிறவா நலந்தரும்.
கல்வியே யெவர்க்குங் கனதன மாகும்.
கல்வி நலமிலார் கர்த்தபம் போல்வார்.
அரும்பெறற் கல்வி யாருயிர்த் துணையாம்.

வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள்.

† ஸஞ்சுக்தா ராணி.

இந்துதேச சரித்திர ஞானமுள்ளோர்க்கு மகம்மது கோரி என்னும் அரசன் யாவனென்பது நன்கு தெரியும். இந்தியாவின் மேற்கெல்லையில் ஆப்கானிஸ்தானம் என்னும் ஒரு நாடுளது; அதில் அரசு செய்து வந்தான் மகம்மது கோரி என்பவன். இவன் குடிகள் மகம்மதியர்கள். இவ்வரசன் இந்தியாவின் மேல் படையெடுத்துச் சென்ற பொழுது கானோஜ் என்னும் நாட்டில் அயோத்தியா புரியில் ஜயசந்திரன் என்பான் அரசு செலுத்தி வந்தான். சுமார் 750 - வருடத்திற்கு முன்னர் இம்மன்னன் அரசு புரிந்து வந்தானென்று சரித்திர ஆராய்ச்சி செய்தவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். இந்த ஜயசந்திர ராஜனுக்கு ரூபலாவண்ய மிகுந்த ஒரு புத்திரி இருந்தனள். அவள் பெயர் ஸஞ்சுக்தா. இவளது கல்வித் திறத்தையும், புத்தி நுட்பத்தையும், அழகையும் எல்லா அரசர்களும் கேள்விப்பட்டு இவளை மணம்புரியுமாறு போட்டி செய்தனர். ஆதிகாலத்திலே ஒரு பெண்ணானவள் தன் மனதுக்குகந்த கணவனைத்தெரிந்து மாலை சூட்டுவது ஆன்றோரால்அங்கீகரிக்கப்பட்ட வழக்கமாயிருந்தது. நளன் சரித்திரத்தை வாசித்தவர்களும், துரௌபதை, சீதை முதலிய பத்னிகளின் சரிதையை யுணர்ந்தவர்களும், சுயம்வரம் என்னும் புராதன வழக்கத்தால் பெண்கள் தாங்களே தங்களுக்கு இஷ்டமான மணாளனுக்கு மாலை சூட்டினரென்பதை அறிந்துள்ளார். இப் புராதன வழக்கத்தின்படி ஜயசந்திர ராஜனும் சுயம்வரம் ஒன்றை ஏற்படுத்தி எல்லா அரசர்களுக்கும் நிருபம் விடுத்தனன். எல்லா அரசர்களும் தங்கள் தங்கள் காணிக்கை கப்பங்களுடன் கானோஜ் நாட்டுக்குச் சென்று ஜயசந்திர ராஜனுக்கு மரியாதை செய்யாநின்றனர்; டில்லி நாட்டு அரசனாகிய ப்ரித்வி ராஜன் மாத்திரம் அச் சுயம்வரத்திற்குப் போகவில்லை. இதைக்கண்ட ஜயசந்திர ராஜன் மிகுந்த கோபங்கொண்டு ப்ரித்வி ராஜனைப் போலவே மண்ணால் பிரதிமை (அஃதாவது உருவம்) ஒன்று செய்வித்து அதற்குக் காவலாளியின் உடுப்புப் போட்டு இராஜாக்கள் கூடியிருந்த அறையின் வாயிலில் ஒரு சேவகனைப்போல நிறுத்தி வைத்தனன்.

---

† இம்மாதின் பெயர் ஸலிவிரதை யென்றும் சில சரித்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

ஸஞ்சுக்தா ராணியின் வரவை எல்லா மன்னர்களும் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டு தங்கள் தங்கள் ஆசனத்தில் வீற்றிருந்தனர். புன்முறுவலுடனும், கண்களைக் கவரத்தக்க அதிக விலை யுயர்ந்த ஆடை யுடுத்திக் கொண்டும், தனது கழுத்தில் மிக அழகான மாலையைத் தரித்துக்கொண்டும், தனது இஷ்ட கணவனைத் தெரிந்தெடுத்து மாலை சூட்டுமாறு அவ்வரங்கில் ஸஞ்சுக்தா இளவரசி வந்து தோன்றினள். அப்பொழுது ஓர் ஊசி விழுந்தாலும் அதன் சப்தமும் காதில் படும்படியான அவ்வளவு நிசப்தமாய் அந்த ராஜ சபை விளங்கியது. ஸஞ்சுக்தா என்னும் மாது அச்சபையின்கண் விஜயஞ் செய்திருந்த ராஜர்களை ஒரு முறை பார்வையிட்டுப் பின் மெல்ல நடந்து ஒவ்வொரு ராஜனையும் பார்த்துக் கொண்டே சென்று மண்ணாற்செய்த பிரதிமை யிருந்தவிடத்தில் வந்து நின்றனள். அத் தருணத்தில் சபை கலேலென்ருய் விட்டது. அப் பிரதிமையின்முன் நின்ற ஸஞ்சுக்தா மங்கையானவள் திரும்பிப் பார்த்தவளுமல்லள், சபையிலிருந்த மன்னர்கள் சொல்வதைக் காதில் போட்டுக்கொண்டவளு மல்லள்; அவர்கள் ஆரவாரத்தைக் கவனித்தவளுமல்லள். அவளது மனச் சாக்ஷி ஏவிய வண்ணம் தன் கழுத்திலிருந்த மாலையை யெடுத்து மண்ணினாற் செய்திருந்த (ப்ருத்விராஜனது) பிரதிமையின் கழுத்தில் அணிந்து தான் இஷ்டப்பட்ட கணவன் ப்ருத்வி ராஜனே யெனக் குறிப்பாகத் தெரிவித்தனள். அதைக் கண்டதும் ஜயசந்திரனுக்கு அளவில்லாக் கோபமுண்டாயிற்று; கண்கள் சிவந்து கோபாக்னியைச் சொரிந்தன; மீசை துடித்தது; உடம்பு பதைப்புற்றது; இவ்விதம் கோபத்தினால் உன்மத்தனாகி, தனது புதல்வியாகிய ஸஞ்சுக்தாவைச் சிறைச் சாலையில் கொண்டுபோய் அடைத்து அவள் தான் செய்த மூடத்தனத்துக்கும், இறுமாப்புக்கும் மனம் வருந்தி, மனந்திரும்பும் வரையில் சிறையிலேயே வைக்கும்படி மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே அவளைச் சிறைச்சாலையில் கொண்டுபோய் வைத்தனர். பின் சபை கலைந்து அங்கு வந்திருந்த ராஜாக்கள் தத்தம் ஊர்போய்ச் சேர்ந்தனர்.

இச் செய்தி டில்லி நகருக்கு ராஜனாகிய ப்ரித்வி ராஜனுக்குத் தெரிய வந்தது. ஸஞ்சுக்தா ராணி தன் விஷயமாய்ச் செய்த செய்கையையும், அதற்கு அவள் தகப்பன் அநியாயமாய் விதித்த தண்டனையையும் அவள் படுங் கஷ்டத்தையும்

சகியாகி, ஸஞ்சுக்தா மாதின் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதும், சுயம் வரத்தின் கண்ணியத்தை நிலை நாட்டுவதும் தனது கடமையென்று மதித்துத் தனது சேனைகளை ஒருங்கு சேர்த்து ஜயசந்திரன் பட்டணத்தின் மீது ப்ரித்வி ராஜன் படையெடுத்துச் சென்றனன். ஜயசந்திரனும் தனது இராணுவத்தைக் கூட்டிப் படுகளத்தில் வந்து நின்றனன். இவ்விரு சேனைகளுக்கும் பெருத்த யுத்தம் விளைந்தது; அதில் ஜயசந்திர ராஜன் தோல்வியடைந்தான். அவன் பட்டணம் ப்ரித்வி ராஜனால் கைப்பற்றப் பட்டது. ஸஞ்சுக்தா ராணி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு டில்லி நகரம் கொண்டுபோகப் பட்டனள். அங்கே வெகு ஆடம்பரத்துடனும், பெருமையுடனும் ப்ரித்வி ராஜனுக்கும் ஸஞ்சுக்தா ராணிக்கும் விவாகம் நடந்தது. இவ்விவாகத்தைத்தடுக்குமாறு ஜயசந்திரன் போருக்குச் செல்லத் துணியவில்லை. ஆயினும் தனக்கு நேரிட்ட அவமானத்தால் மனத் தாங்கல் மிகவடைந்து ப்ரித்வி ராஜனைப் பழிவாங்கும் வகையையே சதா எண்ணிக்கொண் டிருந்தனன்.

இப்படியிருக்க, மகம்மது கோரி என்னும் மகம்மதிய மன்னன் இந்தியாவின் மேல் படையெடுத்து வந்து ஊழிக் காற்றைப் போல் தன் முன்னெதிர்ப்பட்ட யாவற்றையும் அழித்து வந்ததுமன்றி இந்துக்களால் உயிரினும் இனியதாகக் கருதப்பட்டுள்ள கோவில்களை இடித்துத் தள்ளி அவைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மூர்த்திகளை யழித்துச் சின்ன பின்னம் செய்தனன். இஃதன்றியும் கிராமங்களைக் கொள்ளையடித்துக் கொளுத்தி, அனேக ஸ்திரீகளை பலாத்காரமாய்க் கவர்ந்து சென்று அவர்கள் பதிவிரதாத் தன்மையைக் குலைத்துக் காமுகர்களான மகம்மதிய ராணுவ வீரர்களின் வசம் அடிமைகளாகுமாறு செய்தான். ப்ரித்வி ராஜன் இவ் வக்கிரமங்களைக் கேட்ட வுடனே மனஞ் சகியாதவனாகி மட்டில்லாத சினங்கொண்டு குரூபிகளான மகம்மதியர்களைத் தண்டித்து அவர்களுடைய கோர் என்னும் மலை நாட்டுக்குத் துரத்திவிடத் தீர்மானித்தனன். மகம்மதியர்களுக்குத் தகுந்த சிக்ஷை செய்வதற்கு மற்ற மன்னர்களின் உதவி அத்தியா வசியமென்று உணர்ந்து அவர்க ளெல்லோருக்கும் நிருபம் விடுத்தனன். மாதர்களின் மானத்தையும், ஆலயங்களின் பவித்திரத்தையும் தேச சுவாதீனத்தையும் இரக்ஷிப்பது அரசர்க

ளுடைய இன்றியமையாக் கடமை யாகையால் எல்லா அரசர்களும் மகம்மதியர்களை எதிர்த்துத்துறத்த ஆயத்தமாகிப்பாசறைக்குச் சேனைகளுடன் வந்து சேரும்படி அந்த நிரூபத்தில் கண்டெழுதி யிருந்தனன். எல்லா ராஜாக்களும் அவ் வேண்டுகோளுக்கிணங்கி ப்ரித்வி ராஜன் பக்கலில் தங்கள் தங்கள் சேனைகளோடு வந்து சேர்ந்தனர்; ஜயசந்திர ராஜன் மாத்திரம் ப்ரித்வி ராஜன்மேலிருந்த வஞ்சத்தால் வாராமல் தன்னூரிலேயே நின்றுவிட்டான். டிராரி (Tirari) என்னும் படுகளத்தில் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் ஒரு பெரியயுத்தம் நடந்தது; அப்போரில் மகம்மது கோரி தோல்வி யடைந்தான். மகம்மதியர்கள் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு நூற்றுக்கணக்காக மாண்டனர். மகம்மது கோரி உயிர் பிழைத்துத் தப்பிப் போனதே பெரிய காரியமாயிற்று.

ப்ரித்வி ராஜன் ஜயமடைந்ததைப் பார்க்க ஜயசந்திர ராஜனுக்கு அதிக பொறாமை யுண்டாயிற்று; இவனை எப்படிப் பங்கஞ் செய்வது- எப்படி நாசஞ் செய்வது என்னும் எண்ணமானது ஜயசந்திரனுடைய மனத்தில் பூரணமாகக் குடி கொண்டது; ஆகையால் தன்னை நரகில் செலுத்தக் கூடிய காரியமாயினும் தனது பகையாளி ப்ரித்வி ராஜனின் நாசத்தை மாத்திரம் விளைவிக்கக் கூடியதாயின் அதனைச் செய்ய மனமொருப்பட் டிருந்தனன். புஜபல பராக்கிரமத்தால் தனது பகைவனை வெல்ல வேண்டு மென்று இருக்க வேண்டிய எண்ணம்போய், கோழைத் தன்மையுள்ள பாமரர் அவலம்பிக்கும் கபட ஆலோசனைக்கு ஜயசந்திரன் மனமானது இடங்கொடுத்தது; அவன் மகம்மது கோரியின் நட்பைப்பெற்று தன் வஞ்சத்தைத் தீர்க்கத் தீர்மானஞ் செய்து அம் மகம்மதிய ராஜனிடம் ஒரு தூதனை யனுப்பி, இன்னொரு முறை இந்தியாவின் மேல் படையெடுத்து வரும்படியாகவும் அக்காலத்தில் தான் உதவிபுரிவதாகவும் சொல்லும்படி அத்தூதனுக்குக் கட்டளையிட்டனுப்பினன். அவ்வாறே அத்தூதன் போய்ச்சொல்ல மகம்மது கோரி அதிக உவகையடைந்து படையெடுப்புக்குவேண்டிய பரிவாரங்களைச் சேர்க்கத் தலைப்பட்டான். ஜயசந்திரன் மேற்கண்டவாறு தூது அனுப்பி

115

யதுமன்றி தனது புத்திக் கூர்மையாலும் தந்திரத்தாலும் ப்ரித்வி ராஜனுக்கும் முன் அவனுக்கு உதவி புரிந்த ராஜாக்களுக்கும் மித்திர பேதமும் செய்துவிட்டனன். ஆகவே மகம்மது கோரி இரண்டாம் முறை ஜய சந்திரன் பிரேரேபணையால் இந்தியாவின் மேல் படை யெடுத்து வந்தபோது ப்ரித்வி ராஜன் முன்போல மற்ற ராஜாக்களின் உதவியைக் கோரிக்கேட்டும் ஒருவரும் வாராமையால் தான் தனிபாகவே இத் தருணம் மகம்மது கோரி யுடன் போர்செய்ய நேரிட்டது.

ஜயசந்திர ராஜன் தனது படையை யமுனை நதியின் கரையில் இறக்கிக்கொண்டு மகம்மது கோரியை எதிர்பார்த்துக் கொண் டிருந்தனன்; ப்ரித்வி ராஜாவுக்கு நேரிடப்போகும் அபஜயத்தையும் அபகீர்த்தியையும் மனோகற்பனை செய்துகொண்டு பேருவகையுடன் கூடாரத்தில் ஒருநாள் தனியேயிருந்தான். அத்தருணத்தில் ஒரு போர்ச்சேவகன் வந்து "மஹாராஜாவே! நமதுபகையாளிகளின் பாசறை(Camp)யிலிருந்து இளவயதுள்ள ஒரு யுத்தவீரன் வந்திருக்கிறான். அவன் தங்களுடன் கண்டு பேச உத்தரவு வேண்டிநிற்கின்றான்" என்றனன். இளவயதுள்ள போர்வீரனா! என்றுசொல்லி "ஆ! நமது பகையாளிகளின் பாசறையிலிருந்து ஓர் இளவயதுள்ள போர்வீரனா வந்திருக்கிறான்? அவனுக்கு என்ன வேண்டி யிருக்கும்" என்று இவ்வாறு தனக்குள்ளே தானே ஜயசந்திரன் சிந்தித்துக்கொண்டு சும்மா இருந்ததைக் கண்ட போர்ச்சேவகன் "தங்களைக் காணவந்திருப்பவன் ஒரு தூதன்; அதனால் அவனை நமது சேனைக்குள் செல்லவிட்டு இங்குத் தங்கள் சமூகம் அழைத்துவந்தேனென்றனன். இதனைச் செவியேற்ற ஜயசந்திரன் "அங்ஙனமாயின் இங்கேயிட்டுக்கொண்டு வா" என்றுசொல்லி மறுபடி ஏதோ ஒரு யோசனையினால் "நீ வெளியே இரு; அவனைமட்டும் உள்ளே அனுப்பு" என்று போர்ச் சேவகனுக்குக் கட்டளையிட்டுத் தன்னுடைய பட்டாக்கத்தியை யெடுக்கத் தன்னாசனத்தை விட்டெழுந்தனன். ஜயசந்திரனைப் பார்க்கவந்த போர்வீரன் கூடாரத்திற்குள் பிரவேசித்து ராஜாவின்காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரஞ் செய்து அவன்முன் நின்றான். இவ்வாறு நின்ற அப்போர்வீரனை இராஜன் நோக்கி உனக்கு யாதுவேண்டுமென்று வினவினன். அப்போது போர்வீரன் வேஷந் தரித்திருந்த ஸஞ்சுக்தா ராணி

160957

தன்பிதாவாகிய இராஜனை நோக்கிப் பின்வருமாறு பகரலாயினள். "அண்ணு, உமது ஆசீர்வாதம் பெறுவதற்காக வந்திருக்கிறேன். நமது தேச சுவாதீனத்திற்காக மகம்மதியருடன் போர்செய்ய யத்தனித்திருக்கிறேன். உமது ஆசீர்வாதம் பெறுமுன் அவர்களை எதிர்க்க மனமில்லாதவளாயிருக்கிறேன். ஏனெனில் தந்தையின் ஆசிர்வாதமில்லாவிடில் ஜயமடைவது நிச்சயமில்லை."

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஜயசந்திரன் ஐந்து நிமிஷ நேரம் சித்திரப்பதுமைபோல் நின்றுவிட்டனன். பிறகு ஏதோ சொல்ல வாயெடுத்து மறுபடியும் மௌனமாய்த் தனது புத்திரியை ஆழ்ந்த சிந்தையுடன் இன்னொரு ஐந்து நிமிஷநேரம் உற்றுப்பார்த்து "இவைகளுக்கெல்லாம் காரணம் நீதான். இப்பொழுது உன்னுடைய வேண்டுகோளுக்கிணங்க இயலாத காலமாயிருக்கிறது. ஆதலின் இவ்விடம் விட்டு எழுந்துபோ" என்றனன். அப்போது அவனது புத்திரியாகிய ஸஞ்சுக்தா ராணி அதிக வினயத்துடன் "அண்ணு! என் பிரியமான அண்ணு! உமது தேசத்தார் உஜ்ஜீவனத்தைக் கவனியும், அனுதாவான எளிய ஸ்திரீகள் எத்தனைபேர் மகம்மதியர்களால் மானபங்கமடைவார்கள்? இஃது உமக்கிஷ்டமா? எத்தனை கோவில்கள் படுசூரணமாய்விடும், ஆலயங்களில் விக்ரகரூபமாய் நாம் தொழுது வரும் தேவர்களும் தேவிமார்களும் அவமதிக்கப்பட்டு பரிசுத்தக் குறைவு அடைவார்களே. இது நமக்கு அடுக்குமா? இத்யாதி துன்பங்கள் மகம்மதியர்களால் நேரிடாவண்ணம் தடுக்க முயலாவிடில் நமது ஜன்மம் அவலமாகுமே. நான் செய்த குற்றத்தையும் எனக்காக ப்ரித்விராஜன் செய்த காரியத்தையும் மறந்து தேச சுவாதீனத்தைக் கைவிடாது பற்றலும் ஸ்திரீகளின் பதிவிர்தாத் தன்மைக்குக் குறைவு வாராது காத்தலுமே மேலான கடமையென்று உமது மனச்சாக்ஷியே பறையறையும். ஆகையால் அண்ணு" என்று இன்னும் பேசப்போவதைத் தடுத்துவிட்டு வெளியே விரைவாகச்சென்று தன்னைக் காணவந்த போர்ச்சேவகன் பகையாளிகளின் பாசறைக்குப்போய்ச் சேரும் வரை பத்திரமாகப் பாதுகாக்கும்படி தனது சேவகனுக்குக் கட்டளையிட்டுக் குதிரையேறி மகம்மதுகோரி இருந்த இடம் நோக்கிச் சென்றனன். கூடாரத்துள்ளிருந்த ஸஞ்சுக்தா ராணி ஒரு கால்மணிநேரம் காத்திருந்து தன் தகப்பன் வாராமையால் வெளியே போய்ப்பார்த்

துத் தேடியும் அவனைக் கண்டிலளாகி அதிக மனக்கவலையடைந்து தனது சேனைகளிருந்த இடம்போய்ச் சேர்ந்தனள்.

ஜயசந்திரன் மகம்மது கோரியோடு சேர்ந்துவிட்டான் என்று நன்கு புலப்பட்டவுடனே மகம்மதுகோரி ஜயமடைவான் என்று ப்ரித்வி ராஜனுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளங்கியது. ஸஞ்சுக்தா ராணிக்கும் அவ்வாறே தோன்றியது. ஆயினும் மகம்மதியருக்கு வணங்கி மானத்தையும் சுவாதீனத்தையும் இழப்பதைவிட உயிரைவிடுவதே உசிதமென்றெண்ணினர். இனிமேல் நாம் இருவரும் ஒருவரையொருவர் சந்திப்பது அசாத்தியமாய் முடியும் என்று ஒருவரை ஒருவர் அன்பு மிகுதியாலும் நேசத்தாலும் கட்டியணைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் ஆசீர்வதித்துக்கொண்டனர். இவ்வாறு செய்து பிரியுந்தருணத்தில் ப்ரித்வி ராஜன் தன் மனைவியைப்பார்த்து "எனது பிரியநாயகியே! நான் போர்க்களத்தைவிட்டு முதுகுகாட்டி ஓடி எனக்கு அவமானத்தை வருவித்துக்கொள்வேனென்று நினையாதே. என்னைப்போல் என்னுடைய போர்வீரர் ஒவ்வொருவரும் நடந்துகொள்வார்களென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்" என்று கூறினன் இதைக்கேட்ட ஸஞ்சுக்தா ராணி "எனது பிரியநாயகனே! இதைத்தெரிந்தே நான் உம்மைவிட்டுப் பிரிகின்றேன். நீர் போர்க்களத்திலிருப்பது அத்தியாவசியகமாம். நான் டில்லிக்குப் போகாவிட்டால் அங்கிருக்கும் நமது குடிகள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அசக்தர்களாகி மனக்குழப்பமும் திகிலும் அடைவர். இதைத்தடுக்கத்தான் நான்டில்லிக்குச்செல்லுகின்றேன். என் தந்தை தனது மித்திரனாகிய மகம்மது கோரியுடன் டில்லிநகரில் பிரவேசிக்கும்போது அங்கு ஒருஸ்திரீயையும் உயிருடன் காணான். இது நிச்சயம்; பிரியநாயகனே! நீர் அறிவீராக என்று விடைபகர்ந்தனன். இவ்வாறு சொல்லிவிட்டு நாயகியாகிய ஸஞ்சுந்தா ராணி டில்லிநோக்கிச் சென்றனன்; ப்ரித்வி ராஜன் போர்க்களத்திலேயே இருந்தனன்.

சதிபதிகள் பிரிந்து சில மாதங்கள் கழிந்தும் சண்டை ஆரம்பமாகவில்லை. இருதிறத்தாருடைய சேனைவலியும் சமமாக இருந்தமையின் சண்டையைத் துவக்க இருதிறத்தாரும் முன்பின் பார்த்துக்கொண்டிருந்தனர். மகம்மதியர்கள் முன்பு எதிர்க்கட்டுமென்று ப்ரித்வி ராஜன அநாயாசமாய் எதிர்பார்த்துக்

கொண்டிருந்தான். டில்லிநகர் சென்ற ஸஞ்சுக்தா ராணி இந்த மாதங்களெல்லாம் என்ன செய்துகொண்டிருந்தாளெனின் கொஞ்சம் தண்ணீரும் ரொட்டியும் சாப்பிட்டுக் கோரமான சன்னியாசத்வத்தை அவலம்பித்து வந்தனள். அந்நகரின் கண்ணிருந்த மற்ற மாதர்களும் அவ்வாறே செய்துவந்ததுமன்றி எந்த க்ஷணத்திலும் தங்கள் மானத்திற்காக உயிரைவிடத்துணிந்திருந்தனர். ஸஞ்சுக்தா ராணிமுதல், யாசகஞ் செய்துவந்த மகளிர்பரியந்தம் எல்லா மாதர்களும் தங்களுடைய தேச சுவாதீனத்திற்காகவும் பதிவிரதாத்தன்மைக்குப்பங்கம் வாராமலிருப்பதற்காகவும் மகம்மதியருடைய தோல்விக்காகவும் தங்கள் ராஜன் வெற்றிக்காகவும் அல்லும்பகலும் கடுமையான உபவாசமிருந்து தூய மனத்துடன் தங்கள் இஷ்டதேவதைகளைத்தொழுதுக்கொண்டிருந்தனர். இவ்வாறு சிலநாட்களல்ல, சிலவாரங்களுமல்ல, சில மாதங்களும் கழிந்தன. கடைசியில் மும்மரமாய்ச் சண்டையாரம்பித்தது. ப்ரித்வி ராஜனும் அவனது ராணியும் எதிர்பார்த்தவண்ணமே ஓர் இராணுவவீரன் கூடப்பிழைக்காமல் ஹிந்துசேனையானது அழிந்துபோயிற்று. ஓர் இராணுவ வீரனாகிலும் மகம்மதியருக்குக் கீழ்ப்பட்டு அவரது வசமாயினனா அல்லது அவருடைய தயவையாகிலுங் கோரினனா? கண்ணுங் கருத்துமிருந்தவளவும் சண்டை செய்தே ராணுவவீரர்கள் யாவரும் தங்களுடைய உயிரைவிட்டனர். ப்ரித்விராஜனும் தன்னைச் சூழ்ந்து இரக்ஷித்துவந்த போர்வீரர்கள் காயங்களால் மடியத் தானும் அவர்கள் மத்தியில் உயிர்துறந்தனன்.

மகம்மது கோரி ஜயபேரிகையை முழக்கி ஜயசந்திர ராஜனை மிகுதியும் புகழ்ந்தனன். ப்ரித்வி ராஜன் மாண்டதைக் காண ஜயசந்திரனுக்குச் சந்தோஷமல்லவா உண்டாயிருக்கவேண்டும்? அவ்வாறன்றி யாதுகாரணத்தாலோ மனக்கிலேசத்தையடைந்தனன். யுத்தகளத்தில் மாண்டவர்களைப் புதைத்துவிட்டு மகம்மது கோரீயும் ஜயசந்திரனும் டில்லிநகருட் பிரவேசித்தனர். இவர்கள் பிரவேசியாமுன்னரே ஓர் இராணி தனது அரண்மனைக்குள் பிரவேசிப்பதுபோல ஸஞ்சுக்தராணி காஷ்டங்களை வருவித்துத் தீமூட்டி அதனுள் பிரவேசித்து உம்பருலகம் சென்றனள். அதைக்கண்ட மற்ற மாதர்களும் அவ்வாறே எரிகாஷ்டங்களில் பிரவேசித்து உயிரைவிட்டனர். ஆகவே மகம்

மது கோரியும் ஜயசந்திரனும் டில்லிநகருள் சென்றபோது தணிந்துவரும் காஷ்டங்களைக் கண்டனரேயன்றி உயிருடன் ஒரு மகளிரையும் கண்டிலர். ஆண்மக்கள் யாவரும் போரில் மாண்டுபோக, பெண்மக்கள் அனைவரும் தீக்குட் பிரவேசித்து மாண்டனர்; மானத்தைப் பெரிதாகக் கருதினரேயன்றி உயிரைப் பெரிதாகக் கருதவில்லை. அதனைக் கண்ட ஜயசந்திரன் அதிக ஆராமையை யடைந்தனன். தன் மனச்சாக்ஷியால் மிகவும் பீடிக்கப்பட்டான். கடு நரகில் வீழ்த்திய போதிலும் இவ்வித கிலேசமுண்டாகாது. பொறாமையால் தான் அடாத காரியஞ் செய்தது பற்றிப் படாத பாடுபட்டான். மறு வருடம் வருமுன்னரே மகம்மது கோரி ஜய சந்திரனது நகரத்தின் மேல் படை யெடுத்துச் சென்று அவனுடைய நகரத்தைக் கைப்பற்றியதுமன்றி அவனை உயிருடன் வைத்திருந்தால் தனக்கு அநேகம் இடையூறுகள் விளைவிப்பா னென்று பயந்து அவனைச் சிரச்சேதஞ் செய்துகொன்றுவிட்டனன். ஐயோ! பொறாமையை விட்டுத் தேசசுவாதீனத்தை நாடி ஒற்றுமை பாராட்டியிருந்தால் ஜயசந்திர ராஜன் இந்தக் கதியை அடைந்திருப்பானா?.

பெ. மாணிக்கஸாமி முதலியார். பீ. ஏ.

கடமையின் இன்பம்.

நமது கடமையை நாம் செய்வதில் வெட்கப்படவாவது அச்சத்தைக் கொள்ளவாவது கூடாது; கடமையை ஒரு விபரீதமான கஷ்டவேலை என்றும் நினைப்பது கூடாது. கடமையானது நமக்கு ஒரு இரக்கமும் பக்ஷமுமான தாய்போலிருந்து, உலகத்தின் கவலைகளிலிருந்தும் துக்கங்களி லிருந்தும் நம்மைக் காப்பாற்றி, நமக்கு எப்பொழுதும் சுகத்தையே கொடுக்கும் ஒரு கருவியாம். மனிதர்களோடு கலவாமல் தனிமையாய் ஜீவிக்கும் ஒருவனை, ஜன ஸமூகத்திற்கே ஒரு விரோதி யென்றும், தன்னலத்தை நாடுபவன் என்றும் தைரியமாய் நாம் அவனை இகழலாம். நாம் நம் கடமைகளைச் சரிவரச் செய்துமுடிப்பதால், நாம் பரோபகாரிகளாகவும், ஸ்வதந்தரவாதிகளாகவும், கவலையற்றவர்களாகவும் ஆகிறோம். நாம் எப்படி நமது வாழ்க்கையைக் கவலையற்றதாக ஆக்கிக்கொள்ள முடியும்?

பணத்தை நாம் நம்புவதுகூடாது. பணம் பல அபாயங்களுக்கு உள்ளாக்கக் கூடியது; நல்வழியில் செலவிட்டால் ஏதோ சிறிது இன்பம் பயக்கக்கூடியதாயிருப்பினும், அதனை வைத்துக் காப்பாற்றுவதே பெரியதொல்லையாம். துர் நடத்தையில் நம்மை இழுத்துவிட உப கருவியாயிருப்பது செல்வமேயாம். ஆகவே, செல்வத்தினால் நாம் சுகம்பெற முயல்வது பயனற்ற செய்கையாம். உண்மையாகவே, பிறர் மகிழும்படிக்கும் திருப்திகொள்ளும் படிக்கும் நமது வேலைகளைச் செய்து முடித்தால், நமக்கு ஒருவித பயமுமில்லை. இப்படி நம் கடமைகளை முழுமுழுப் பின்றிச் செய்து முடித்தால், நமக்குஉலகத்தில் சமாதானமும் நம்மிடத்து பஹு ஜன விஸ்வாஸமும் உண்டாகும். ஒருவிதத் தவறுமின்றி நம் கடமைகளைச் செய்து முடித்துவிட்டால் நம் பரம பிதா நம்மைக் காப்பாற்றுவாரென்பதில் ஏதேனும் ஸம்சயம் உண்டோ? ஆகவே, நம் கடமையைச் செய்வதில்தான் நமக்கு உண்மையான இன்பம் உண்டு. நாம் கண்டிப்பாய்ச் செய்து முடித்தே தீரவேண்டுமென்று கட்டுப்படுத்தும் ஒரு கருவியென்று கடமையை ஒருபோதும் மனத்திற் கொள்ளலாகாது. ஜனங்கள் நாம் எப்பொழுதும் சந்தோஷமாயும் சுயேச்சையாயும் இருக்கிறோமென்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் நினைக்கிறபடி அல்லது உண்மையில் அப்படியில்லை. ஒரு அற்பசந்தோஷத்துக்கு நாம் இடங்கொடுத்தால் அது மேன்மேலும் வளர்ந்துகொண்டே போகும். அது பலத்துப் போனபிறகு அதனைத் தடுப்பதுமுடியாது. ஒரு சிறு வேலை தானே; அதனைச் செய்யாவிட்டால் என்ன பிரமாதம் வந்துவிடப் போகிறது என்று நாம் ஒருபோதும் நினைப்பது கூடாது. எல்லாவற்றையும் ஒன்றுபோல் நினைத்துத் திருப்திகரமாய் முடிக்கும் ஆத்மாவுக்குப் பெரிய கடமை என்றும் சிறிய கடமை யென்றும் பேதமே கிடையாது என்பது கிரேக்கப் பழமொழி. "தன் கடமையைச் செய்பவன் ஒரு சிறந்த அறிவாளி; அந்த அறிவாளி புண்யாத்மாவாகிறான்; புண்யாத்மாவாய்விட்டால் அவனுக்கு ஸதா ஸந்தோஷமே உண்டாகும்" என்று ஆல்ப்ரட் அரசர் சொல்வது வழக்கம். ஆகவே, கடமையைச் செய்வதே இன்பம்.

"நமது கடமையை ஸரிவரச் செய்வதைவிட மேலானது நமது வாழ்க்கையில் வேறொன்றுமில்லை" என்று வெல்லிங்டன் பிரபு சொல்லியுள்ளார். நமது வாழ்க்கை முழுதும் கடமைகளா

லாயின. நமது பிறப்பு முதல் இறப்புவரை, நமக்கு உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஸமமானோர், தந்தைதாயார், கடவுள், தேசம், அரசர் ஆகிய இவர்களுக்குச்செய்வனவற்றைச் செய்வதேகடமையாம். முடிவாகக் கடமை யென்பது ஒரு கடனும். அக்கடனை நாம் ஒவ்வொருவருக்கும் கொடுத்துத் தீர்க்கவேண்டியது அவஸ்யமாகும். ஆனால், இக்கடன் பிறர் சொல்லிக் கொடுக்கக்கூடியதல்ல; தானே தன் மனஸாக்ஷியின் உதவியால் அறிந்து கொடுக்கக் கூடியதாம்.

சபல புத்தியும், மனஸாக்ஷியின் பலமின்மையுமே ஒருவன் செய்யவேண்டிய கடமையைச் செய்யவொட்டாமல் தடுக்கின்றன. தன்னைத் தான் ஜெயிக்கிறவனெவனோ அவனே தன் கடமையைப் பூர்த்தியாகச் செய்ய வல்லவனாவன். முதல் முதல் ஒவ்வொருவனும் தன் தாய் தந்தையருக்குச்செய்யவேண்டிய கடமைகளைச் செய்யக் கடவன்; பின்னர்க் குருவுக்கும், இராஜாவுக்கும் செய்யக் கடவன்; இவை எல்லாவற்றிலும் மேலானது தன் தேசத்துக்குச் செய்யவேண்டிய கடமையாகும். தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமையே மிகவும் பரிசுத்தமானது என்பது ஆன்றோரது கொள்கை. ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் அதிலுள்ள ஒவ்வொருவனும் தன் தேசத்துக்குச் செய்யவேண்டியவற்றுள் ஒன்றையும் விடாமல் செய்து முடிப்பது மிகவும் அவசியமான வேலையாகும்.

M. S. ஸ்ரீநிவாஸ ஸர்மா.

ஸம்பாஷணை.

பிறரோடு நீ ஸம்பாஷிக்கும்பொழுது நீ எதைப் பேசுகின்றாயென்றும், யாரைக்குறித்து, எப்பொழுது, எப்படிப் பேசுகிறாயென்றும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நீபேசும் போது புத்திசாலித்தனமாயும் சாதுர்யமாயும் பேசு. ஸம்பாஷணையின் பெருங்கஷ்டம் என்னவென்றால் ஸரியானவிடத்தில் ஸரியானதைப் பேசுதலும், தவறானவிஷயத்தை எப்பொழுதும் சொல்லாதிருத்தலுமேயாம். நீ ஒருஸங்கத்தில் இருக்கும்பொழுது நீ யாரென்பதையும் உனது செயல் யாதென்பதையும், கவனித்தல் நன்றாம். ஸம்பாஷணைக்காலத்தில் நீ பேசும் இடம், மாதிரி, காலம் இவை

கட்கு தகுந்தாற்போல் உன்விஷயத்தை ஸரிப்படுத்திக்கொள். ஸம்பாஷணையின் பொழுது வாக்சாதுர்யத்தைக் காட்டினும், புத்திக் கூர்மையுடன் பேசுவதே விரும்பத்தக்கது. ஒவ்வொருவனும் நிஷ்கபடத்துடனும், ஜாக்ரதையுடனும் பேசவேண்டும்.

எதையும், பதறி, யோசனையின்றிச் சொல்லி விடக்கூடாது. ஒருவருக்கு மனவருத்தம் தரும் சொற்களையும், அருவருக்கத் தக்க விஷயங்களையும் அறவே ஒழித்துவிடுதல் நல்லது. ஸம்பாஷணைக் காலம் வீண்காலம் என்று கருதப்படாவண்ணம் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நன்மையுண்டாகும் வண்ணம் விஷயங்களை எடுத்துப் பேசுவதே ஸம்பாஷணையின் முக்யநோக்கமாம்.

ஒருதடவை பேசுவதற்குமுன் அவ்விஷயத்தைக் குறித்து இருமுறைகேள். கேட்பதற்குச் சுறுசுறுப்பாயும் சொல்வதற்குத் தாமதமாயுமிரு. பேச்சு வெள்ளியென்றும் மௌனம் பொன் என்றும் கூறும் பழமொழியை எப்பொழுதும் ஞாபகத்தில் வை.

க்ரேன் (Crane) என்பவர் ஒவ்வொரு மனிதனும் தனது ஆயுள் காலத்தில் எவ்வளவு பேசுகின்றான் என்பதைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்:

ஒவ்வொரு மனிதனும் நாள் ஒன்றுக்குக் குறைந்த பக்ஷம் 5 மணி நேரம் ஸம்பாஷணை செய்கிறான். ஒருமணிக்கு 15 அக்டேவோ பக்கமவ்வளவு சாதாரணமாக ஒருவன் பேசுகின்றான்; அஃதாவது ஒருவாரத்தில் 525 பக்கம் விஷயம் பேசுகின்றான். எழுபது வருஷத்தில் அவன் 3640 ஆக்டேவோ புஸ்தகங்கள் கொள்ளும் விஷயத்தைப் பேசுவான். 3640 வால்யூம்கள் அடங்கிய ஒரு புஸ்தகசாலை மிகவும் நன்குமதிக்கத்தக்கதல்லவா?

இன்றும் நாளையும்.

ஒருவன் இன்று செருக்குடனும் பணத்துடனும் மிக்க ஸந்தோஷத்துடனிருக்கின்றான்; நாளையோ எல்லாராலும் இகழப்பட்டு ஏழையாகின்றான். இனிமேல் வரப்போகும் பல வருஷங்களில் செய்யவேண்டிய வேலைகளைக் குறித்துத் திடஞ்செய்து கொள்ளுகிறான். நாளைக்குப்பூமியில் மௌனமாய் ஒரே தூக்கமாய்த் தூங்கி விடுகின்றான். இன்றைக்கு வெகுடம்பமாய் இனிமையான

உணவைச் சாப்பிடுகின்றான்; நாளைக்கு இவனே நாய் நரிகளுக்கு இரையாகின்றான். இன்றைக்கு வெகு விநோதமாய்ப் பட்டு, சரிகை வஸ்திரங்களுடன் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகின்றான்; நாளைக்கு மண்ணில் படுத்து உறங்குகின்றான். இன்றைக்கு மோக்ஷத்தையடையச் சாதகமானவைகளைச் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றான்; நாளைக்கு "நேற்று நற்கிரியைகளைச் செய்யாமற்போனோமே" என்று மனம்வெந்து இறக்கின்றான். (London Magazine.)

நன்மொழிகள்

1. நீயே ஒரு கார்யத்தைச்செய்தால் அது பூரண திருப்தியாய் நிறைவேறும்; உன் பிள்ளை செய்தால் ஏறக்குறையச் சுமாராயிருக்கும்; உன் வேலைக்காரன் செய்தால் அது கெடுதியாகவே முடியும்.

2. பழமொழி என்பது என்ன? பலருடைய அநுபவமும், சிறந்த உண்மையும், பெரிய விஷயங்களைச் சுருங்கச்சொல்லலுமேயாம்.

3. கொடுக்கிற விதம், கொடுக்கப்படும் வஸ்துவைக் காட்டிலும் மேலான மாதிரியாய்க் கொடுப்பவனது குணத்தை வெளிப்படுத்துகின்றது.

நான்கு சிறந்த அரசர்களின் முடிவு.

உலகத்தில் ஒவ்வொருவனும் முன்னுக்கு வந்து நல்ல பெயர்பெறுவதற்கு ஆசையேகாரணம். ஆசையில்லாவிட்டால் முற்போக்கு கிடையவே கிடையாது. நம்மனோர் சொல்லிக்கொள்ளும் முதுமொழியாய "போதுமென்றமனமே பொன்செய்யும் மருந்து" என்பது இங்குக் கருதப்படலாகாது. ஐரோப்பாவில் ஸிம்ஹாஸனத்தில் ஏறிய அரசர்கள் யாவரினும் மேம்பட்டவர்களான நால்வரின் கதி என்னவாயிற்றென்பதைச்சிறிது கருதுவோம்.

1. அலெக்ஸாந்தர்-உலகமுழுதையும்ஜயிக்கவேண்டும் என்ற பேராவாவுடன் பெரிய சேனைகளைத் திரட்டிக்கொண்டு ஐரோப்பாவில் பல தேசங்களையும் ஆசியாவில் பல ராஜ்யங்களையும் தன்வசமாக்கிக்கொண்டு, ஜயிப்பதற்கு இன்னும் தேசங்களில்லையே என்று ஏக்கம் கொண்டான். என்ன

தான் வென்றும் யாது பயன்? கடைசியில் ஓர் ஊருக்கு நெருப்பு வைத்து அதில் தானும் இறந்துவிட்டான்.

2. ஹானிபால். நாகரிகத்திலும் ராஜ்யத்தை ஆளும் திறமையிலும் பண்டையகாலத்தில் உயர்ந்தவர்கள் எனப்படும் ரோமருக்கு யமன்போல் காணப்பட்ட ஹானிபால், தன் சத்ருக்களில் தேர்ந்த யுத்தவீரர்களைக்கொன்று அவர்களது மோதிரங்களை மூன்றுமரக்காலாக அளந்தகுரான். ஆனால் முடிவில் அவன் எங்ஙனம் உயிர் துறந்தானெனின் ஜன்மதேசத்தி லிருந்து விலக்கப்பட்டு அந்நியர்தேசத்தில் ஒருவரும் அழுவாரின்றித் தற்கொலை செய்து கொண்டான்.

3. ஸீஸர். ரோம் தேசத்தின் சிறந்த போர்வீரனும், 800 பட்டணங்களைப்பிடித்தவனும், தனது உடையைத் தன் சத்ருக்களில் 10 லக்ஷம் பேரின் ரத்தத்தினால் நனைத்துக்கொண்டவனுமான ஸீஸர் தனது சொந்த ஊரில் தனது அன்பார்ந்த நண்பர்களாலேயே கொல்லப்பட்டான்.

4. நெப்போலியன். ஐரோப்பா முழுவதையும் ஜயித்து ரத்தக்காடாக்கியவனும் இங்கிலீஷ் காரருக்குப் பெருத்த சத்ருவாயும், சிறந்த யுத்தவீரன் என்றபெயர் பெற்றவனுயு மிருந்த நெப்போலியன், கடைசியில் தன் தேசத்திலிருந்து பஹிஷ்காரம் செய்யப்பட்டு, ஆப்பிரிக்காவுக்குமேற்கில்ஸெயின்ட் ஹெலீனா என்ற சிறு தீவில் ஒரு கைதியாய்க்கிடந்து இறந்தான்.

ஆகவே என்ன புகழ்பெற்றாலும் நற்குணமில்லாவிட்டால், ஒருவன் கெடுதிக்கே ஆளாவதை நாம்தினந்தோறும் கண்டிருந்தும் "பிறர்கேட்டை எண்ணுதிருப்பது உத்தமம்" என்பதை அறியாமலிருப்பது பேதைமையே யன்றோ?

ஸ்ரீநிவாஸ ஸர்மா, வேலூர்.

125

ஓர் அற்புதமான தீர்மானம்.

ஒரு விளைநிலத்தைக் குறித்து ஒரு யௌவனமாதுக்கும், ஒரு வாலிபனுக்கும் வழக்கு நேர்ந்தது. குத்தகைச்சீட்டின் உறுதியைக்கொண்டு அவ்வாலிபன் குறித்த நிலம் தனக்குரியதென்றும், ஒரு மரணசாதனத்தின் உறுதியைக்கொண்டு அப்பெண் அது தனக்குரியதென்றும் நீதிபதியிடம் முறையிட்டனர். நீதிபதி யோசனைசெய்து அப்பெண்ணை நோக்கி, அவ்வாலிபன் நல்ல வயதும் யோக்கியமுமுடையவனாகக்காணப்படுகிறான்; இவ்வழக்கை நீங்கள் நடத்தினால் வீண்செலவுகள் ஏற்பட்டு உங்கள் கையிலுள்ள சொற்பப்பொருளும் செலவழிந்துவிடும் ஆதலால், நான் சொல்லப்போகுந் தீர்ப்புக்கு உங்களைச் சம்மதிக்கவிடாது பலர் தடுப்பார்கள்; ஆயினும் நான் உங்களுக்கு நல்ல ஒரு தீர்ப்புக்கொடுக்கிறேன். அஃதாவது நீங்களிருவரும் விவாகஞ்செய்து கொள்வீர்களானால் அந்நிலமும் உங்களுக்குச் சொந்தமாகிவிடும் என்று தீர்ப்புக் கூறினார். அவ்விதமே அவ்விருவரும் சம்மதித்து விவாகஞ்செய்து சந்தோஷமாய் வாழ்கின்றார்களாம்.

பிறருடைய விஷயங்களை அறிந்துகொள்ள விரும்புதல்.

ஒரு மனிதன் அந்தரங்கமான சில விஷயங்களைப்பற்றி ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மற்றொருவன் அக்கடிதத்தைக் கவனித்துக்கொண்டேயிருந்தான். அப்பொழுது கடிதம் எழுதிக்கொண்டிருந்தவன் அக்கடிதத்தில் "ஒரு மூடன் என் கடிதத்தில் எழுதியுள்ளவிஷயங்களை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கிறான், ஆகையினாற்றான் நான் என்னுடைய மற்ற இரகசியங்களை இதில் எழுதவில்லை" என்று எழுதினான். அப்பொழுது கடிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவனுக்குக் கோபம்வந்து நான் உன் கடிதத்தைப் பார்க்கவில்லையே என்றான். அதற்கு எழுதுகிறவன் உன்னைப்பற்றி நான் ஒன்றும் எழுதவில்லையே என்று மறுமொழி பகர்ந்தான்.

ஒரு புத்திசாலியானசிறுவன்.

ஒரு வர்த்தகசாலைக்கு ஒரு நாள் ஒருவன்சென்று தனக்களவுள்ள ஒரு சோடி சப்பாத்துகளைத்தெரிந்து விலை கேட்டபோது அங்கிருந்த வாலிபன், அவற்றின் விலை 16 ஷிலிங் 6 பென்ஸ் என்றுதெரிவித்தான். அதைகேட்ட அவன் என்னிடம் 13 ஷிலிங் 6 பென்ஸ் தானிருக்கின்றது. மிகுதியை நாளைக்குக்கொண்டுவந்து தருகிறேன்; உன் விருப்பம் எப்படியென்று கேட்டான். அவ்வாலிபன் நல்லதென்று கூறி இரண்டு சப்பாத்துகளை நன்

றுகக் கடுதாசியாற் சுற்றி அவனிடம் கொடுத்து அனுப்பினன். சிறிது நேரத்தில் அவ்வர்த்தக சாலையின் சொந்தக்காரன்வந்து அவ்வாலிபனைக் கண்டித்து நீ செய்தது முழுதும் தவறு; உத்தரவில்லாமல் நீ என்கடன் கொடுத்தாய். அவன் இனி ஒருபோதும் இந்த வரமாட்டானே யென்றான். அவ்வாலிபன் தன் எஜமானைப்பார்த்து அவன் இங்கே தவறாமல் வருவான், ஏனென்றால் நான் அவனுக்குக் கொடுத்தனுப்பிய சப்பாத்துக ளிரண்டும் இடதுகாலுக்குப் போடவேண்டியன. ஆதலால் அதை மாற்றுவதற்காக எப்படியும் அவன் இங்குவருவான் என்று விடை பகர்ந்தான்.

யுத்தம்.

இப்போது ஐரோப்பாக் கண்டத்தில் நடைபெறும் யுத்தத்தைப்பற்றி விசேஷ சமாசாரங்கள் ஒன்றும் வருவதில்லை. மழைக்காலமா யிருப்பதனால் யுத்தம் உக்கிரமாக நடப்பது கூடாமையாயிருக்கின்றது,

ஜெர்மனியர் கலேயைப் பிடிக்கச்செய்த முயற்சி பயன்பெறவில்லை. அவர்கட்குப் பிரான்ஸ் எல்லையில் எங்குந் தோல்வியாகவே யிருக்கின்றது; அவர்களுடைய நோக்கத்தின் பிரகாரம் ஒன்றும் நடைபெறவில்லை.

ருஷிய ஜெர்மானிய யுத்தத்திலும் ஜெர்மானியருக்கு வெற்றி ஒன்றும் ஏற்படவில்லை.

ருஷிய துருக்கி யுத்தத்தில் துருக்கியர் தோல்வியடைந்து வருகின்றனர்.

ஆஸ்ட்ரிய செர்விய யுத்தத்தில் ஆஸ்ட்ரியர் பெரும்படையுடன் செர்வியாவில் பிரவேசித்தனரென்றும், அவர்கள் செர்வியரால் மிகுதியும் தோல்வியடைந்தனரென்றும் தெரிகின்றன.

பால்க்கலண்டு தீவிற்கருகே ஜெர்மன் கப்பற்படைக்கும் பிரிட்டிஷ் கப்பற்படைக்கும் பெரிய யுத்தம் நடந்தது. அதில் ஜெர்மானியரது நான்கு யுத்தக்கப்பல்கள் கடற்கிரையாக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து பிரான்சுக்குச் சென்றிருக்கும் இந்திய வீரர்கள் வீரதீரமாக யுத்தஞ்செய்து வருகின்றனரென்று பிரசித்திபெற்று வருகின்றனர். ஐரோப்பியர்களுடன் இந்துக்கள் சமமாக நின்று யுத்தஞ்செய்து வருவது சிலாகிக்கத் தகுந்தவிஷயாம். இதுகாறும் இந்துக்கள் ஐரோப்பிய [illegible] போர்செய்வது கூடாதென்றிருந்த ஆக்கிரகம இந்த யுத்த காரணமாக மாறுபாடடைந்தது இந்துக்களது நற்காலமே.